அசல்

[1.5.42] வே. துரைசாமி

அசல் -1

V. DURAISWAMY IYER,
TAMIL PANDIT,
P. S. H. SCHOOL.

வேலூர்
2/1, Sadayappa Mudali Street,
சத்துவாச்சாரி போஸ்ட்
MYLAPORE.
(North Arcot Dt)

Dated, ____________ 194 .

அநேக நமஸ்காரம்.

மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் பூதவுடலை விட்டுப் புகழுடலுடன் நின்றார்கள் என்ற கொடுஞ் செய்தியை இன்று தினசரிப் பத்திரிகை யொன்றிற் பார்த்துத் திடுக்கிட்டேன்; அளவற்ற துக்கம் எய்தினேன். அவர்கள் பிரிவு தமிழுலகத்திற்கு ஈடுபடுத்த முடியாத பெரு நஷ்டமும் கஷ்டமுமாகுமெனினும், சிறப்பாக அவர்கள் அடிக்கீழமர்ந்து கல்வி கற்கும் பேறுள்ள என் போன்றவர்களுக்குப் போக்கிக் கொள்ள முடியா துரதிர்ஷ்டமாகும்.


அவர்கள் செய்துவந்த பஞ்சாட்சர ஜபச் சிறப்பையும், தமிழ்மொழி வளர்ச்சிக்குரிய உழைப்பையும் நினைந்து நினைந்து மனமுருகுவதைத் தவிர, எல்லாம் அறிந்த தங்களுக்கு ஆறுதலாக எதுவும் எழுத இப்பொழுது தோன்றவில்லை. இங்ஙனம் விதேயன்,

வே. துரைசாமி.

அசல்

[1.5.42] வே. துரைசாமி

அசல் -1



அசல்

[1.5.42] வே. துரைசாமி

அசல் -1

